

# டேசா ரெஜாங் பொது வீடமைப்புத் திட்டத்தில் மின்தூக்கி பிரச்சினை: உடனடி நடவடிக்கை எடுக்க மாநகர் மன்றம் உத்தரவாதம்

**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஜன.2-

டேசா ரெஜாங் பொது வீடமைப்புத் திட்டத்தின் டி கட்டடத்தில் ஏற்பட்ட மின்தூக்கி பிரச்சினைக்குத் தீவிர கவனம் செலுத்தி உடனடியாகத் தீர்வு காண்பது உறுதிப்படுத்தப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது. இதனால் அந்த டி கட்டடத்திற்குத் தற்போது வரை குடியிருப்பாளர்கள் பயன்பாட்டிற்கு மின்தூக்கி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. டி கட்டட பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்பட்டு மின்தூக்கி மீண்டும் செயல்படுவதை உறுதிச் செய்ய இந்த விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்தப்படும் என்று குடியிருப்பாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

இந்த மின்தூக்கி பிரச்சினைக்குள்ளானதில் கடந்த டிசம்பர் மாதம் 18ஆம் தேதி தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை மேற்கொண்ட சோதனையில் டி கட்டடத்தில் இருக்கும் மின்தூக்கிகள் மூடப்பட வேண்டும். 1 மின்தூக்கி மாற்றுச் செயலாக்கத்தில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.இதில் டி கட்டடத்திற்கான 1 மின்தூக்கிச் சோதனை நடவடிக்கைக்குக் குத்தகையாளர் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பியுள்ளதால் இதற்கு முன் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.